துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2024) நீலாங்கரையில் நடைபெற்ற, தி.மு.கழக சென்னை தெற்கு மாவட்ட இலக்கிய அணியின் புரவலர் சைதை எம்.எஸ்.மணி அவர்களின் பேரனும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச்செயலாளர் – திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி அவர்களின் மகனுமான மருத்துவர் பா.கௌதம் மருத்துவர் இரா.கீர்த்தி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், இ.பரந்தாமன், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா மற்றும் கட்சி நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி சென்னைக்கு அருகாமையில் சர்வதேச தரத்திலான விளையாட்டு நகரம் (GLOBAL SPORTS CITY) அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.11.2024) துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.மணிவாசன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா,பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன்,சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, நிதித்துறை செயலாளர் (செலவினம்) எஸ்.நாகராஜன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்.நந்தகுமார், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்ஜெ.மேகநாதரெட்டி,டேபிள் டென்னிஸ் ஒலிம்பிக் வீரர் சரத் கமல், இந்திய அலைச்சறுக்கு(SURFING) கூட்டமைப்பின் தலைவர் அருண் வாசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தலைமையில் – வேலைவாய்ப்பு முகாமில்

648 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் - அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்!

திருவள்ளூர், நவ.17

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் ஜெயா அறிவியல் மற்றும் கலை கல்லூரியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பட்டுத் துறை சார்பில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் வேலை வாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து 648 நபர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்

இதனை தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பட்டுத் துறை அமைச்சர் தெரிவிக்கையில்,

படித்து முடித்த இளைஞர்கள் தங்களுக்கு நல்ல ஊதியத்தில் பணி கிடைக்கப் பெற்று வாழ்வில் முன்னேறவேண்டும் என்பதே அவர்களது வாழ்நாள் இலட்சியமாகும். அத்தகைய இளைஞர்களின் நலனில் பெரும் அக்கறை கொண்டு, அவர்களின் முன்னேற்றத்திற்காக முழுவீச்சில் செயல்படும் முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின் படி, வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார் துறையில் பணி நியமனம் பெறும் வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் சிறிய மற்றும் பெரிய அளவில் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன. மாதத்தின் இரண்டாவது அல்லது மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் சிறிய அளவில் அலுவலகவளாகத்தில் இவ்வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன அரையாண்டு தோறும் பெரிய அளவில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இவ்வரசு பதவியேற்றது முதல்நாளது தேதி வரை 168 பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் 1,589 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும், டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 100 சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு 3,603 மாற்றுத்திறனாளிகள் உட்பட 2,24,721 நபர்களுக்கு தனியார் துறை நிறுவனங்களில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து 2014 முதல் 2019 வரையான ஆண்டுகளில் வேலை வாய்ப்பு பதிவினை புதுப்பிக்க தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகையானது விடியல் ஆட்சியால் வழங்கப்பட்டது. இச்சலுகையினைப் பயன்படுத்தி 2,88,108 பதிவுதாரர்கள் பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது பொற்கரங்களால் 14.08.2021 அன்று இத்துறைக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் இந்த முகாம் தொடர்ந்து நடைபெற்ற வருகிறது. ரைட் சகோதரர்கள் மற்றும் ஆபிரகாம் லிங்கம் போன்றோர் தங்களது கடின உழைப்பால் அறிவியல் கண்டுபிடிப்புகளை இந்த உலகிற்கு கொண்டு வந்தார்கள். கடின உழைப்பால் மட்டுமே வெற்றி பெற முடியும். நேர்மறை எண்ணத்துடன் விடாமுயற்சி, தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும். உயர்ந்த எண்ணத்தில் செயல்படும் போது மட்டுமே மிக உயர்வான பணியினை அடைய முடியும். பெற்றோர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் கடின உழைப்பால் மட்டுமே வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இதனை தொடர்ந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் தெரிவிக்கையில், இன்றைய தினம் நமக்கு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமை ஏற்படுத்தி தந்து மழை வந்தாலும் ஏராளமானோர் வந்து கொண்டிருக்கிறார்கள் இந்நிகழ்வில் 4000 பேருக்கு மேல் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம் இதில் 2000 பேருக்கு மேல் பணி அமைத்தப்படுவார்கள் ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன், தமிழ் நாடு முதல்வர் அவர்கள் நம் நாட்டின் மீதும் மக்களின் மீதும் இளைஞர்கள் மீதும் அக்கறை கொண்டு ஒவ்வொரு திட்டத்தினை அக்கறையுடன் செயல்படுத்தி வருகிறார்கள்

இந்தியாவிலேயே மிகப் பெரிய வருவாய் உள்ள மாநிலங்களில் மகாராஷ்டிரா அடுத்ததாக நம் தமிழ் நாடு தான் சொல்கிறார்கள் அடுத்ததாக குஜராத் சொல்லுவார்கள் நம் தமிழ்நாட்டில் தான் சிறு குறு தொழிற்சாலைகள் 2 லட்சத்து 80 ஆயிரம் தொழிற்சாலைகள் தமிழகத்தில் இருக்கின்றன

இந்தியாவில் தொழிற்சாலைகள் முதலிடம் தமிழகம் தான் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சாரும் நம் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கடந்த காலங்களில் கொண்டு வந்த பல திட்டங்களை கொண்டு வந்துள்ளார் அந்த அனைத்து திட்டங்களும் கலைஞர் அவர்களை சாரும் ஒன்றிய தொழில்துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்கள் பெரும்மளவில் தொழிற்சாலைகளை கொண்டு வந்துள்ளார்கள்

.இவ்வேலைவாய்ப்பு முகாமிற்கு வருகை புரிந்துள்ள வேலை நாடுநர்கள் தங்கள் ஏற்ப வேலைவாய்ப்பின் பணி நியமன ஆணையினை பெற்று உங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி நீங்கள் பல வேலை நாடுநர்களுக்கு வேலை வழங்கும் வகையில் சமுதயத்தில் சிறந்து விளங்க வேண்டும் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்வேலை வாய்ப்பு முகாமில் 217 தொழில் நிறுவனங்களும், இரண்டு தொழில் பயிற்சி நிறுவனங்களும் என மொத்தம் 219 நிறுவனங்கள் பங்கு பெற்றுள்ளன. ஆண்கள் 1382 பெண்கள்1204, மாற்றுத் திறனாளிகள் 39 ஆக மொத்தம் 2625 வேலை நாடுநர்கள் விண்ணப்பபதிவு செய்திருந்தார்கள்.

அதில் ஆண்கள் 415, பெண்கள் 233 இதில் 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 648 வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது இதில் இரண்டாம் கட்டத்திற்கான ஆண்கள் 405 , பெண்கள் 322 மொத்தம் 726 வேலை நாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன 8 நபர்கள் திறன் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த. பிரபுசங்கர். பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் , ஆவடி மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி , வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குநர் சென்னை இ.ர.தேவேந்திரன், திருவள்ளூர் வருவாய் கோட்டாசியர் கற்பகம் , மாவட்ட வேலைவாய்ப்பு தொழிநெறி வழிகாட்டும் மைய அலுவலர் விஜயா, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி. தேசிங்கு, நகர மன்ற தலைவர் உஷா ராணி ரவி, திருநின்றவூர் நகராட்சி ஆணையர் செல்வி.கீர்த்தனா, கல்லூரி தாளாளர் கனகராஜ், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.11.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில், உலக சிறு விலங்குகள் கால்நடை மருத்துவ சங்கம் மற்றும் இந்தியாவின் சிறு விலங்கு பயிற்சியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் (FSAPA) சார்பில் பாரா பேட்மிண்டன் வீராங்கனை செல்வி துளசிமதி முருகேசனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர்ச.அருண்ராஜ் மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம்

காட்பாடியில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்!

அமைச்சர் துரைமுருகன் பங்கேற்றார்!

வேலூர், நவ. 17-

வேலூர் மாவட்டம் காட்பாடியில் தி.மு.க வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது. அமைச்சர் துரைமுருகன் பங்கேற்றார். கூட்டத்திற்கு காட்பாடி வடக்கு பகுதி தி.மு.க. செயலாளர் வன்னியராஜா தலைமை தாங்கினார்.

காட்பாடி தெற்கு பகுதி செயலாளரும் மாநகராட்சி துணை மேயருமான எம். சுனில்குமார் அனை வரையும் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், ஒன்றிய செய லாளர்கள் தணிகாசலம், எஸ்.சரவணன் கே. கருணாகரன் சி.ரவி, பரமசிவம், முருகப்பெரு மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக சட்டமன்ற தொகுதி பார்வையாளர் குறிஞ்சி சிவா, மாவட்ட செயலாளர் கழக செயலாளர் ஏ.பி நந்த குமார் எம்.எல்.ஏ, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் பேசியதாவது:

தேர்தல் எப்படி நடக்கும் எப்படி வியூகம் வகுப்பது என்பது எனக்கு தெரியும் .யாரும் என்னை ஏமாற்ற முடியாது. ஒருமுறை நான் ஏமாந்து விட்டேன் அது கோவிட் காலத்தில் நடந்தது.

அப்போது என்னால் வேகமாக வரவும், போகவும் முடியவில்லை . இல்லை என்றால் கண்ணில் விரலை விட்டு ஆட்டி இருப்பேன் .

சிலர் எனக்கு எதிராக துரோகங்களை செய்தனர். அத்தகையவர்களை, களை எடுத்து விட்டு தேர்தலை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் ஆற்றல் எனக்கு உண்டு.

தான் யாரையும் மன்னிப்பேன் கட்சிக்கு துரோகம் செய்பவர்களை மன்னிக்க மாட்டேன். என்னையே கொல்ல வந்தால் கூட மன்னிப்பேன் ஏனென்றால் 60,70 ஆண்டு கள் திமுகவை வளர்த்தவன் நான். ஆகையால் இது எனது கட்சி. நம்முடைய கட்சி என்று இருப்பவன் நான். போன முறை நான் எல்லோரும் நல்லவர்கள் என்று நினைத்து ஏமாந்து விட்டேன். விளைவு சில பாடங்கள் எனக்கு கற்பிக்கப்பட்டது. அதை திரும்பி பார்க்க மாட்டேன். காட்பாடி தொகுதியில் பொன்னையில் மேம்பா லம், தடுப்பணைகள்,அரசு மருத்துவமனை, காட்பாடியில் இருந்து சத்துவாச்சாரிக்குச் செல்ல ரூ.100 கோடியில் மேம்பாலம் என பல திட்டங்களை முடித்து விட்டேன். மகிமண்ட லத்தில் தொழிற்பேட்டையுடன் 2வதாக காட்பாடியில் ஒரு தொழிற்பேட்டை வரப்போகிறது.

இதுபோக தமிழக முதல்வர் ஸ்டாலின் மக்களுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இது போன்ற திட்டங்களை மக்களிடம் பேச வேண்டும். ஆகவே வாக்குச் சேகரிப்பில் பாக முகவர்கள் முக்கியமாக அவர்கள் தங்கள் பணியை சிறப்பாக செய்ய வேண்டும். பருவ மழைக்கு பின்னால் நான் ஒவ்வொரு பகுதியாக வருவேன். செயல்படா தவர்கள் தூக்கி எறியப்படு வார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

பராமரிப்புப் பணி காரணமாக

ஈஞ்சம்பாக்கத்தில் மின்விநியோகம் நிறுத்தம்!

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் தகவல்!

சென்னை, நவ.17-

சென்னையில் 19.11.2024 அன்று காலை 09:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை மின்வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ் காணும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும்.

மதியம் 2:00 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின்விநியோகம் கொடுக்கப்படும்.

ஈஞ்சம்பாக்கம் : இஸ்கான் கோயில் சாலை, ஈசிஆர் சாலை 1 பகுதி, அல்லி குளம், குணால் கார்டன், டிவிஎஸ் ஏ இடம், ஷைமலா கார்டன், ராஜீவ் அவென்யூ, ஜெகஜீவரம் அவென்யூ, சீதாராமன் அவென்யூ, வூரா வில்லா, அக்கரை கிராமம், விஜிபி பகுதி, ஸ்பார்க்கிங் சாண்ட் அவென்யூ, சாய்பாபா கார்டன், எல்.ஜி.அவென்யூ, ஷேஷாத்ரி அவென்யூ, வைத்தியலிங்கம் சாலை.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் மற்றும் பேரூராட்சியில் உள்ள பல்வேறு பகுதிகளில் சுமார் 7.67 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்ட கட்டிடங்களை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் ஆகியோர் திறந்து வைத்து பயன்பாட்டிற்கு அர்பணித்துப் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதில் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரி வள்ளல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.சசிகுமார், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய மற்றும் பேரூர் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சமூக வலைதளங்களில் வலம் வருவது!

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கோவூர் ஊராட்சி அம்பாள் நகர் அங்கன்வாடி மையத்தில் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் பா.சுதாகர் ஆகியோர் உள்ளனர்.